# கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. N.முரளிதரன், பி.ஏ., பி.எல்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஸ்குமார் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

**அ.வ.எண். 212/2017** நாள்: 15.10.2022

PW.2:

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை:

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பணை வந்தது, முருகன் ஒரு இடத்தை வாங்கினார் அதற்கு ஒப்பந்தம் போட்டார், அட்வான்ஸ் தொகை கொடுத்த போது நான் இருந்து சாட்சி கையொப்பம் போட்டேன், அது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க தான் எனக்கு அழைப்பணை வந்துள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் Ex.A.3 கிரைய ஒப்பந்தத்தில் இருக்கும் ஒன்றாவது சாட்சி கையொப்பம் நான் போட்ட சாட்சி கையொப்பம் தான். Ex.A.3 கிரைய ஒப்பந்தம் முருகன் மற்றும் மணிமேகலைக்கு இடையே ஏற்பட்டதாகும். Ex.A.3 கிரைய ஒப்பந்தம் உடுமலைப்பேட்டை நீதிமன்றத்திற்கு எதிரே உள்ள ஒரு vendor office ல் வைத்து போட்டார்கள், சரியாக ஞாபகம் இல்லை. 03.05.2012 ஆம் தேதி தான் Ex.A.3 கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. வாதி முருகன் ஏற்கனவே எனக்கு நெருங்கிய நண்பர், இது போல் சாட்சி கையொப்பம் போட வேண்டும் என்று அவர் கேட்டதால், நான் போய் Ex.A.3 கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போட்டேன். Ex.A.3 கிரைய ஒப்பந்தம்

போட்டபோது முருகனும், மணிமேகலையும், நானும், இன்னொரு ஆணும், இன்னொரு பெண்ணும், ஆவண எழுத்தரும் இருந்தோம். நான் போகும் போது Document ஐ தயார் செய்து வைத்திருந்தார்கள், முருகன் அதை படித்துப்பார்த்துவிட்டு கையொப்பம் போட்டார், மணிமேகலையும் அதை படித்துப்பார்த்துவிட்டு கையொப்பம் போட்டார், அப்பறம் முருகன் பணம் கொடுத்தார். Ex.A.3 கிரைய ஒப்பந்தத்தில் முதலில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன், அதன் பிறகு வேருறொரு பெண்மணி அதில் சாட்சி கையொப்பம் போட்டார், அவர் பெயர் சரியாக தெரியவில்லை. வாதி முருகன் 1ம் பிரதிவாதி மணிமேகலைக்கு ரூபாய்.12,00,000/- கொடுத்தார். அன்றைக்கு மொத்த கிரைய தொகை ரூபாய்.35,00,000/- என்று பேசினார்கள், அன்றைக்கு ரூபாய்.12,00,000/- கொடுத்துவிட்டு, பாக்கி கிரைய தொகை ரூபாய்.23,00,000/-ஐ கிரையம் செய்யும் அன்று கொடுப்பதாக பேசிக்கொண்டார்கள். Ex.A.3 கிரைய ஒப்பந்தத்தில் கண்ட சொத்து கட்டிடம் ஆகும், அது பாதி கட்டிய நிலையில் இருப்பதாக தான் அன்று பேசிக்கொண்டார்கள். Ex.A.3 கிரைய ஒப்பந்தப்படி கிரையம் நடந்ததாக என்பது எனக்கு தெரியாது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.